IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.167/2023

Deposition of Witness for P.W.7

| | | |
|---|---|---|
| NAME | - | **திரு.அசோக் குமார்** |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | **துணை இயக்குநர், வட்டார தடய அறிவியல், வேலூர் ஓய்வு .** |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.11.2025.

**எதிரி ஆஜர். 1, 6 ம் எதிரிகள் ஆஜர் இல்லை மனு ஏற்பு. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**முதல் விசாரணை-**

**நான் வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்கநராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றேன். நான் பணியிலிருந்தபோது கடந்த 23.04.2019 அன்று சத்துவாசாரி காவல் நிலைய குற்ற எண்.191/2019 வழக்கில் இறந்துபோன செல்வராஜ் வயது 35 என்பரது உடல் உள் உறுப்புகள் பேராசிரியர் சட்டம் சார்ந்த மருத்துவம் வேலூர் அரசு மருத்துவ கல்லூரி அவர்களிடமிருந்து பெறப்பட்டது. அவற்றை 30.04.2019 அன்று ஆய்வு செய்யப்பட்டது உடல் உள்ளுபுகளான 1 இரைப்பையில் 359 மி.கி எத்தில் ஆல்ககால் 2 எசிறு குடலில், 351 மி.கி. எத்தில் ஆல்ககால் 3 கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தில் 347 மி.கி. மூளையில் 267 மி.கி. எத்தில் ஆல்ககால் இரத்தத்தில் 258 மி.கி. எத்தில் ஆல்ககால் இருப்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது. அவற்றில் வேறு நச்சுப் பொருட்கள் ஏதும் கண்டறியப்படவில்லை. நான் வழங்கிய நஞ்சு இயல் பகுப்பாய்வு அறிக்கை ஆகும். அந்த உடல் உள்ளுருப்புகள் ஆய்வு அறிக்கை Ex.P.3.**

மேலும் இவ்வழக்கில் பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்ட மாதிரி இரத்தம் 26.04.2019 அன்று ஆய்வகத்தில் பெறப்பட்டு குருதி வடிநீரியியல் ஆய்வுக்காக தடைய அறிவியல் துறை சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மேலும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மாதிரி பொருட்கள் நீதிதுறை நடுவர் எண். 5 வேலூர் அவர்களிடமிருந்து 03.05.2019 அன்று ஆய்வகத்தில் பெறப்பட்டு 14.05.2019 அன்று ஆய்வு செய்யப்பட்டது. பொருள் எண்.1 அடர் பழுப்பு கரையுடன் கூடிய சிமெண்ட் காரைத் துண்டுகள் பொருள் எண். 2 சாதா சிமெண்ட் காரைத் துண்டுகள் பொருள் எண்.3 அடர் பழுப்பு கரையுடன் கூடிய காஸ் துணி. (வழக்கு சொத்துகள் நீதிதுறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து தபால் அனுப்பியும் பெறப்படாததால் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது).

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 10.11.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2025.11.10 18:15:14 +0530

Additional District Judge(FTC),
Vellore